அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல:01/2001

அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு,07
2001 ஜனவரி மாதம் 03 ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்

## அலுவலக பணியாளர் சேவையின் பதவி உயர்வுகள்

2000,12,31 ஆந் திகதிக்கு அமைச்சுக்களில்/திணைக்களங்களில் நிலவுகின்ற அலுவலக பணியாளர் சேவையின் பதவி உயர்வு மூலம் நிரப்ப வேண்டியுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் அனைவரிடமும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றது,

02, அலுவலக பணியாளர் சேவையின் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 660/10 ஆம் இலக்க 1991,05,03 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 11 மற்றும் 12 ஆம் பிரிவுகளைத் ( பதவி உயர்த்துதல்) திருத்துவதற்கு வெளியிடப்பட்ட 722/16 ஆம் இலக்க, 1992,07,08 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் அந்த சேவையின் பதவி உயர்வுகள் செய்யப்படல் வேண்டும், அதன்படி அ,பே,சே,வகுப்பு 11 இன் வெற்றிடங்கள் அ,ப,சே,111 மற்றும் 111 ‘அ’ வகுப்புக்களின் பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்ட 2000,12,31 ஆந் திகதிக்கு 03 வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களை பதவி உயர்த்துவதன் மூலம் நிரப்புதல் வேண்டும்,

03, அலுவலகப் பணியாளர் சேவையின் வகுப்பு 1 இன் வெற்றிடங்களை நிரப்பப்படுவது 2000,12,31 ஆந் திகதிக்கு அ,ப,சே. வகுப்பு 11 இன் பதவியொன்றில் 09 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள, பதவி உயர்வு பெறுகின்ற தினத்திற்கு உடன்முன்னரான 05 வருட கால தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தை உடைய உத்தியோகத்தர்களைப் பதவி உயர்த்துவதன் மூலமாகும்,

04, சேவை முதுமுறை அடிப்படையாகக் கொண்டு அமைச்சுக்களின் மட்டத்தில் இந்தப் பதவி உயர்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், சேவை முதுமுறைக்காக ஆகக் கூடியது 100 புள்ளிகளைக் கணக்கிடுதல் வேண்டும், ஒரு வருட சேவை முதுமுறைக்கு 05 புள்ளிகள் வீதம் சம்பந்தப்பட்ட வருடங்களுக்கான சேவை முதுமுறையைக் கணக்கிடுதல் வேண்டும்,

05, அலுவலகப் ப,சே, வகுப்பு 1 மற்றும், வகுப்பு 11 க்கான பதவி உயர்வுக் கடிதங்கள் அ,ப,சே, வகுப்பு 1 மற்றும் வகுப்பு 1 ஆக மாத்திரமே அனுப்பப்படுவதுடன், நிலவுகின்ற வெற்றிடங்களுக்கிணங்க அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவர் அந்தந்த வகுப்புக்கு ஏற்புடையதாக அலுவலகப் பணியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் 'அ' அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பதவிகளில் அமர்த்த வேண்டும்,

06, நேர்முகப் பரீட்சை குழு உத்தியோகத்தர்கள் மூவரைக் கொண்டிருக்க வேண்டியதுடன் அதற்காக இணைந்த சேவைகள் பணிப்பாளரின் முன் அங்கீகாரத்தை பெற்றிருக்க வேண்டும்,

07, திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் தமது திணைக்களங்களில் நிலவுகின்ற வெற்றிடங்கள் பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டியதுடன், அமைச்சில் கடமை புரிகின்ற இணைந்த சேவையைச் சேர்ந்த தகைமை வாய்ந்த எல்லா நிரந்தர கனிட்ட பணியாட்களையும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்துதல் வேண்டும்,

08, பதவி உயர்வுகளை வழங்குவதற்காக நேர்முகப் பரீட்சைச் சபையின் விதந்துரைப்புக்களையும், அமைச்சின் கீழான வகுப்பு 1, வகுப்பு 11 இல் 2000,12,31 ஆந் திகதிகளில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கையையும், அமைச்சின் செயலாளரின் விதந்துரைப்புடன் எனக்கு அனுப்ப வேண்டும்,

09, 2001,04,30 ஆந் திகதிக்கு முன்னர் இந்தப் பதவி உயர்வுகள் அனைத்தும் வழங்கி முடிக்கப்பட வேண்டியதுடன், இதுவரையில் 25/99 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் கீழ் பதவி உயர்வு அளிக்கப்படாத ஏதேனும் ஓர் அமைச்சு இருப்பின் முதலில் அந்தப் பதவி உயர்வுகளை வழங்கி அதன் பின்னர் இந்தச் சுற்றறிக்கையின்படி பதவி உயர்வுகளை வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்,

ஒப்பம் எம்,என்,ஜுனைட்
செயலாளர்
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு